## PRESS NOTE

## BILL COLLECTOR ARRESTED FOR DEMAND AND RECEIVING BRIBE FOR FIXING HOUSE TAX

The complainant, is a resident of Sriji Apartments, Manapakkam Main Road, Manapakkam, Chennai-125. His father–in–law was having a flat measuing, Poothapedu Ramapuram, Chennai. He had expired on 21.05.2021. His legal heirs sold the flat to one Tr.Vinayagam and his wife Tmt.Anjugam. The house tax for the flat was not assessed and paid to Chennai Corporation so far. The sellers agreed to pay the house tax as on date to Chennai Corporation at the time of selling the flat. For this purpose, Tmt.Anjugam, the purchaser gave a written request to Tr.Ganesan, who was working as Tax Collector at Ward-151, Zone-11, Valasaravakkam, Greater Chennai Corporation. Tr.Ganesan informed the purchaser Tmt.Anjugam that the house tax to be paid to Chennai Corporation will come around 1 lakh for the period from 2011 to till date. Hence, the purchaser Tmt.Anjugam asked the sellers to set right the tax issue. Hence, the complainant, son-in-law of the flat owners approached Tr.Ganesan on 11.10.2022 at his office in connection with the assessment of the house tax for the flat. At that time, Tr.Ganesan, Tax Collector, ward-151, Zone-11 demanded Rs.10,000/- for assessing and calculating the pending amount to be paid from 2011 to till date.

On 12.10.2022, when the complainant Tr.Magesh again met the bill collector Tr.Ganesan at his office at around 10.45hrs. and requested for assessment of the flat for property tax, Tr.Ganesan reduced bribe amount

from Rs.10,000/- to Rs.9,000/- and asked the complainant Tr.Magesh to come and meet him with bribe amount Rs.9,000/-.

Since the complainant Tr.Magesh was not willing to pay the bribe amount for getting the house assessed for property tax, he had approached DVAC with a written complaint against Tr.Ganesan, Tax Collector, Ward-151, Zone-11, Greater Chennai Corporation.

The duty of the Tax Collector is to inspect the building, assess the tax and the pending amount to be paid. Since the Tax Collector Tr.Ganesan had differed by not his duty and demanded bribe of Rs.9000/-, an FIR was registered in DVAC vide Cr.No.2/AC/2022/CC-IV on 18.10.2022 against Tr.Ganesan.

In this connection a trap was organized on 19.10.2022 Tr.M.Ganesan, Tax Collector, ward-151, Zone-11, Greater Chennai Corporation who reiterated his earlier demand was caught red handed while receiving the bribe amount of Rs.9,000/- from the complainant Tr.Magesh in the presence of official witnesses. He was arrested on 19.10.2022 at 10.40hrs and remanded to judicial custody.

*****

## <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>வீட்டு வரி நிர்ணயம் செய்ய லஞ்சம் கேட்டு வாங்கிய பில் கலெக்டர் சென்னை லஞ்ச ஒழிப்பு துறையினரால் கைது</u>

இவ்வழக்கின் புகார்தாரர் சென்னை மணப்பாக்கம், மெயின் ரோடு ஸ்ரீஜி அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருகிறார். இவருடைய மாமனாருக்கு சென்னை பூத்தப்பேடு ராமாபுரம் அன்னை சத்தியா நகரில் காசி அடுக்கு மாடி குடியிருப்பில் முதல் தளத்தில் 9 வது பிளாக்கில் 640 சதுர அடி கொண்ட ஒரு வீடு இருந்தது. இவருடைய மாமனார் 21.05.2021 அன்று இறந்துவிட்டார். அவருடைய வாரிசுதாரர்கள் மேற்படி அந்த வீட்டை திரு. விநாயகம் மற்றும் அவரது மனைவி திருமதி. அஞ்சுகம் ஆகியோருக்கு விற்றுவிட்டனர். இந்த வீட்டிற்கு இது நாள் வரை வீட்டு வரி மதிப்பீடு செய்து சென்னை மாநகராட்சியில் செலுத்தபடவில்லை. மேற்படி குடியிருப்பை விற்கும் பொழுது இது நாள் வரை செலுத்தாத வீட்டு வரியை தாங்களே செலுத்தி விடுவதாக வீட்டை விற்றவர்கள் உத்தரவாதம் கொடுத்துள்ளனர். வீட்டை வாங்கிய திருமதி.அஞ்சுகம் சென்னை மாநகராட்சியில் வளசரவாக்கத்தில் மண்டலம் 11, வார்டு 151 இல் பில் கலெக்டராக பணிபுரியும் திரு. கணேசன் என்பவரிடம் மேற்படி வீட்டை ஆய்வு செய்து சொத்து வரி நிர்ணயம் செய்து வழங்கும்படி மனு கொடுத்துள்ளார். அப்பொழுது திரு. கணேசன் திருமதி. அஞ்சுகத்திடம் 2011 முதல் தற்போது வரை இந்த வீட்டிற்கு கணக்கீடு செய்தால் ரூ.1,00,000/- ஆகும்

என்று கூறியுள்ளார். உடனே திருமதி. அஞ்சுகம் வீட்டை விற்றவரிடம் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரியை முழுவதுமாக செலுத்தி தருமாறு கூறியுள்ளார். அதன் பேரில் திரு. மகேஷ் 11.10.2022 ஆம் தேதி பில் கலெக்டர் திரு. கணேசனை சந்தித்து சொத்து வரியை மதிப்பீடு செய்து தருமாறு கூறியுள்ளார். அப்பொழுது திரு. கணேசன் சொத்து வரியை 2011 முதல் தற்போது வரை மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்வதற்கு ரூ.10,000/- த்தை லஞ்சமாக கேட்டுள்ளார். மீண்டும் புகார்தாரர் திரு. மகேஷ், பில் கலெக்டர் திரு. கணேசனை 12.10.2022 ஆம் தேதி சுமார் 10.45 மணிக்கு சந்தித்து சொத்து வரியை மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்து தருமாறு கோரியுள்ளார். அப்பொழுது திரு. கணேசன் வீட்டு வரி நிர்ணயம் செய்து தர ரூ.1000/- குறைத்துக் கொண்டு தனக்கு லஞ்சமாக பணம் ரூ.9,000/- தருமாறு கூறியுள்ளார்.

லஞ்சமாக பணம் கொடுக்க விரும்பாத திரு.மகேஷ் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திற்கு வந்து திரு.கணேசன் மீது ஒரு புகார் மனு 18.10.2022 அன்று காலை கொடுத்தார்.

வரி வசூலிப்பவரின் பணியானது மனுவை பெற்றவுடன் வீட்டை ஆய்வு செய்து எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பதை நிர்ணயித்து சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி பாக்கியை கணக்கிட்டு எழுத்து மூலம் தெரிவித்து வரியை வசூலிக்க வேண்டும். அப்படி செய்ய தவறி லஞ்சமாக பணம் கேட்ட காரணத்திற்காக அவர் மீது 18.10.2022 அன்று காலை 10.30 மணி அளவில் குற்ற எண்.2/2022 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

19.10.2022 ஆம் தேதி காலை 09.00 மணி முதல் 10.00 மணி வரை பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்பொழுது பில் கலெக்டர் திரு.கணேசன் அரசு சாட்சி முன்பு புகார்தாரர் திரு. மகேஷ் என்பவரிடமிருந்து லஞ்சப்பணம் ரூ. 9,000/- த்தை மீண்டும் கேட்டு பெற்றுக்கொண்ட போது கையும் களவுமாக பிடிபட்டார். அவரை கைது செய்து குற்றவியல் நடுவர் திருவள்ளூர் அவர்கள் முன்பு ஆஜர் படுத்தி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

********